


உ

கணபதி துணை

# ஒளவையார் அருளிச் செய்த
# விநாயகர் அகவலும்

# தேவராய சுவாமிகள்
# அருளிச் செய்த
# கந்த சஷ்டி கவசமும்

ராமஜெயம்
சோதிடன்
சைவம் ஐயர்
V. S. JEYASANGAR

# விநாயகர் அகவல்

## *ஆசிரியப்பா*

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூக்ஷிக வாகன !

இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி

ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்துப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே !

*திருச்சிற்றம்பலம்*

# விநாயகர் வழிபாட்டில் அருகம்புல்லின் சிறப்பு

சுலபன் என்ற ஓர் அரசன் அவந்தி என்ற நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவியின் பெயர் சுபத்திரை.

சுலபன் தருமசிந்தையுள்ளவன். தெய்வ பக்தி நிரம்பியவன். நீதி நெறி தவறாது குடி தழுவிக் கோலோச்சி வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் ஓர் அந்தணன் சுலபனிடம் உதவி கோரி வந்திருந்தான். அவன் பெயர் மதுசூதனன்,

அந்தணன் மிகவும் வறுமை வாய்ப்பட்டவனாக இருந்தான். உடுத்திக் கொள்ள ஓர் உடைகூட இல்லாமல் மனைவியினுடைய கிழிந்த சேலையின் ஒரு பகுதியையே இடுப்பில் உடையாக அணிந்து வந்திருந்தான்.

சுலபன் ஏழைகள்பால் இரக்கமுடையவன்தான். வந்தவர்க்கெல்லாம் வேண்டிய அளவு பொருள்களை வாரி வழங்குவது அவனுடைய இயல்புதான்.

ஆனால் அவன் விஷயத்தில் அன்று விதி விளையாடி விட்டது.

அந்த அந்தணனுடைய உடையும் தோற்றமும் மன்னன் சுலபனுக்கு வினோதமாக வேடிக்கையாக இருந்தது.

ஆகவே தன்னை மறந்து கலகலவெனச் சிரித்துவிட்டான்.

மதுசூதனன் வறுமை வாய்ப்பட்டவனாக இருந்தாலும் பக்திமான். வேதசாத்திரங்களைப் பயின்றவன்.

மன்னன் தன் தோற்றத்தைக் கண்டு ஏளனமாகச் சிரித்தது மதுசூதனுக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கிற்று.

அவன் மன்னனை நோக்கி ஆத்திரத்துடன் " மன்னா ! என்னுடைய வறுமைத் தோற்றத்தைக் கண்டு இரக்கம் கொள்ளாது ஏளனப்படுத்தும் வகையில் நகைத்தாய். மனித சுபாவத்துக்கு அடிப்படையான இரக்க குணம் அற்றவனாக நீ நடந்து கொண்டு விட்டதால், அறிவு சற்றுமில்லாத மந்த குணம் படைத்த காளை மாடாகப் பிறக்கக் கடவாய் " என்று சாபம் கொடுத்து விட்டார்.

மதுசூதனன் தன் கணவனுக்கு அவசரப்பட்டுச் சாபம் கொடுத்து விட்டதைக் கண்ட அரசி சுபத்திரை மிகவும் வேதனைப்பட்டாள்.

அந்தணன் கொஞ்சம் பொறுமை காண்பித்திருந்தால் சுலபன் அவனுடைய வறுமையை அகற்றும் விதத்தில் பொன்னும் பொருளும் கொடுத்திருப்பான் என்பதை அவள் அறிவாள்.

மதுசூதனன் அவசரப்பட்டுச் சாபம் கொடுத்துவிட்டது காரணமாக அவன் மீது சுபத்திரை கடுஞ்சினம் கொண்டாள்.

" அந்தணரே, அந்தணர் குலத்தில் பிறந்தும் உம்மிடம் பொறுமைக் குணம் அமையாது போய்விட்டது. என் கணவர் தவறு செய்து விட்டதாக உமது மனத்தில் பட்டிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி என் கணவரைத் திருத்த முற்பட்டிருக்க வேண்டும். என் கணவர் திருந்த மறுத்திருந்தால் நீர் சாபம் கொடுத்திருக்கலாம். என் கணவருடைய உயர்ந்த குண இயல்பினை உணர்ந்து கொள்ளாமல் அற்ப காரணத்துக்காகச் சாபம் கொடுத்த நீர் மனிதனாக இருக்கவே தகுதியற்றவர். நீர் ஒரு கழுதையாக பிறக்கக் கடவீர் " என்று சுபத்திரை அந்தணனுக்குச் சாபம் கொடுத்து விட்டாள்.

மன்னன் தவறிழைத்திருக்க அதற்காக மன்னனைக் கண்டிப்பதற்குப் பதில் தனக்குச் சுபத்திரை சா்பம் கொடுத்து விட்டது கண்டு அந்தணன் கோபாவேசமடைந்தான்.

" அறிவுள்ள ஓர் அரசி போலச் செயற்படாமல் சண்டாளப் பெண் போல கேவலமாக நடந்து கொண்ட நீ ஒரு சண்டாளப் பெண்ணாப் பிறக்கக் கடவது " என்று அந்தணன் சாபம் கொடுத்து விட்டான்.

ஆய்ந்தாய்ந்து பாராமல் அறிவைக் கைவிட்டு விட்டு ஆத்திரத்துடன் செயற்பட்ட காரணத்தால் மன்னன் சுலபன், அரசி சுபத்திரை, அந்தணன் மதுசூதனன் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் சாபம் கொடுத்துக் கொள்ளும் மாறு விதிவசம் அமைந்துவிட்டது.

அந்த மூவரும் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்ட சாபத்தின் பலாபலன்களை உடனடியாக அனுபவிக்கத் தொடங்கினர்.

மன்னன் சுலபன் ஒரு எருதாக மாறி அந்த நகரத்திலிருந்த ஒரு குடியானவன் வீட்டில் சென்று சேர்ந்தான்.

அந்தணன் மதுசூதனன் ஒரு கழுதையாக மாறி அதே நகரத்திலிருந்த ஒரு வண்ணானிடம் போய்ச் சேர்ந்தான்.

சுபத்திரை சண்டாளப் பெண்ணாக மாறி நகரத்தின் சேரியில் சென்று வசிக்கத் தொடங்கினாள்.

குடியானவன் ஒருநாள் வயலை உழுத பிறகு ஏரியிலிருந்த சுலபனாகிய மாட்டை அவிழ்த்து மேய விட்டான்.

அந்தப் பக்கமிருந்த குளத்தின் பக்கமாக கழுதை மீது அழுக்கு மூட்டையை ஏற்றிக்கொண்டு வந்த வண்ணான் மதுசூதனனாகிய கழுதையின் முதுகிலிருந்த அழுக்கு மூட்டையை இறக்கிப் போட்டுவிட்டுக் கழுதையைப் புல்மேய விடுத்தான்.

அங்கே பக்கத்திலேயே சுபத்திரையாகிய சண்டாளப் பெண் புல் அறுத்துக் கொண்டிருந்தாள்.

சண்டாளப் பெண் புல்லை அறுத்துக் கட்டாகக் கட்டும் சமயத்தில் திடீரெனக் கடுமையான மழை பிடித்துக் கொண்டது.

புல் கட்டைத் தூக்கிக் கொண்டு மழையில் நனையாமலிருப்பதற்காக அருகில் இருந்த ஓர் விநாயகர் ஆலயத்தின் பக்கமாகச் சென்று உள்ளே ஒதுங்கினாள்.

எருதும், கழுதையும் மழைக்கு அஞ்சி அதே விநாயகர் ஆலயத்திற்குள் ஓடி வந்து ஒதுங்கி நின்றன.

காற்றும் மழையும் மிகவும் பயங்கரமாக சுழன்றடித்தன. மழை தொடர்ந்து விடாமல் பெய்து கொண்டிருக்கவே சண்டாளப் பெண், கழுதை, எருது ஆகிய மூவரும் ஆலயத்தை விட்டு வெளியேற வழியின்றி அங்கேயே தங்க வேண்டியதாயிற்று.

பசி எடுக்கவே கழுதை சண்டாளப் பெண் வைத்திருந்த புல்லுக்கட்டில் வாய் வைத்துத் தின்னத் தொடங்கியது.

அதனை கண்ட சண்டாளப் பெண் அங்கே கிடந்த ஒரு மரக்கட்டையை எடுத்து கழுதையை பலங்கொண்ட மட்டும் அடித்தாள்.

கழுதை மிரண்டு பின்னங்கால்களால் மாட்டை உதைத்தது.

மாடு வெகுண்டு கழுதையைத் தன் கொம்புகளால் முட்டித் தள்ளிற்று.

கழுதையும், எருதும் சண்டாளப் பெண் மீது விழ, அவள் திரும்பவும் அடிக்க கோயிலின் வெளிப் பிராகாரத்தினுள் ஒரே களேபரமாகி விட்டது.

அந்தச் சமயத்தில் உட்பிராகாரத்தில் விநாயகப் பெருமானுக்கு அந்தி நேரப் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது

வெளிப் பிராகாரத்தில் ஒரே கூச்சல் குழப்பமாக இருந்ததைக் கண்டு உள்ளே பூஜை நடத்திக் கொண்டிருந்தவர்களும், வழிப்பாடு நடத்திக் கொண்டிருந்தவர்களும் வெளியே வந்து பார்த்தனர்.

கழுதையும் மாடும் போட்டி போட்டுக் கொண்டு புல்லைப் பிடுங்கித் தின்ன சண்டாளப் பெண் அவற்றை அடித்து விரட்ட ஒரே ரகளையாக இருப்பதைக் கண்டு பூசை நடத்திக் கொண்டிருந்தவர்கள் சண்டாளப் பெண்ணையும், மாட்டையும், கழுதையையும் வெளியே விரட்டியடிக்க முயற்சியெடுத்தனர்.

வெளியே கடுமையான இடி மழையாக இருந்ததால் கோயிலை விட்டு வெளியேற முடியாமல் சண்டாளப் பெண், கழுதை, எருது ஆகிய மூவரும் கோயிலுக்குள்ளேயே வளைய வளைய ஓடி வந்தனர்.

அப்போது சண்டாளப் பெண் கையிலும், மாடு, கழுதை ஆகியவற்றின் வாயிலும் இருந்த அருகம் புற்கள் சிதறி விநாயகர் விக்கிரகத்தின் மீது விழுந்தன.

ஆலய பூஜை நடத்திக் கொண்டிருந்தவர்கள் அந்தக் காட்சியை கண்டு திகைப்பும் வேதனையும் அடைந்தனர்.

சண்டாளப் பெண் கைப்பட்ட புல் விநாயகப் பெருமான் திருமேனி மீது பட்டு விட்டதே எனக் கலங்கினர்.

சற்றும் ஈவிரக்கம் பாராது சண்டாளப் பெண், எருது, கழுதை ஆகிய மூவரையும் கடும் மழை என்றும் பாராது வெளியே துரத்தி விட்டனர்.

பிறகு குடங்குடமாக நீர் கொண்டு வந்து பரிசுத்தப்படுத்தினர்.

இரவு முழுவதும் அடித்த மழை, காற்று தாளமாட்டாமல் சண்டாளப் பெண், எருது, கழுதை ஆகிய மூவரும் உயிரிழைந்து விட்டனர்.

உடனே விண்ணுலகத்திலிருந்து விநாயகப் பெருமான் அனுப்பி வைத்த விமானம் பூத கணங்கள் சகிதம் வந்து சண்டாளப் பெண், எருது, கழுதை ஆகிய மூவரின் ஆத்மாக்களையும் சுமந்து மேலேறிச் சென்றது

அந்தக் காட்சியை வியப்புத் தோன்றக் கவனித்த சில முனிவர்கள் பூத கணங்களை நோக்கி, " நியமம், நிஷ்டை, வழிப்பாடு ஏதும் செய்யாத இவர்களுக்கு இம்மாதிரி உயர் பதம் கிடைத்த காரணம் என்ன? என வினவினர்.

" முனிவர்களே ! இவர்கள் மூவரும் துரத்தியடிக்கப்பட்டபோது கோயிலுக்குள் சுற்றிச் சுற்றி வலம் வந்தார்கள். அப்போது சண்டாளப் பெண் கையிலும், மாடு, கழுதை ஆகியவற்றின் வாய்களிலும் இருந்த அருகம்புற்கள் விநாயகப் பெருமானின் திருமேனி மீது பட்டது. அதனால் அருகம்புல் கொண்டு விநாயகப் பெருமானை அர்ச்சனை செய்ததற்கான பலன் இவர்களுக்குக் கிடைத்தது " என கணநாதர்கள் புகன்றனர்.

முனிவர்கள் அந்தத் தகவலலைக் கேட்டு பெருவியப்பு அடைந்தனர்.

அவர்கள் கணநாதர்களை நோக்கி, "கணநாதர்களே! திட்டமிட்டு வழிபாடு நடத்தாத நிலையில் தற்செயலாக அருகம்புல் விநாயகமூர்த்தியின் திருமேனியில் பட்டதற்கே இவ்வளவு மேன்மையான பலன் கிடைக்கப் பெற்றது என்றால், அருகம்புற்களைக் கொண்டு முறையாக விநாயகப் பெருமானை ஆராதித்தால் இன்னும் உயர்ந்த பலன்கள் கிடைக்க வேண்டுமே! அது குறித்து அருள் கூர்ந்து விளக்கிக் கூறுங்கள் " என வேண்டிக் கொண்டார்கள்.

கணநாதர்கள் கீழ்க்கண்ட விருத்தாந்தங்களை முனிவர்களுக்கு எடுத்தியம்பினார்கள்.

தரபரம் என்னும் நகரத்தை ஒட்டிய ஒரு சிறு காட்டில் கவுண்டின்யர் என்ற முனிவர் ஒருவர் இருந்தார்.

கவுண்டின்யரின் தர்மபத்தினியின் பெயர் ஆசிரியை.

முனிவர் விநாயகப் பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவர். விநாயகப் பெருமானை ஆராத்தி வழிபாடு நடத்துவதே தனது வாழ்க்கையின் குறிக்கோள் என வாழ்ந்து வந்தார்.

சாதாரணமாகத் தெய்வ வழிபாடு நடத்துவோர் தெய்வங்களின் மூர்த்தியை மணமிக்க மலர்களைச் சாத்தி ஆராதிப்பதுதான் வழக்கம். விநாயகரை வழிப்படும் பலரும் அவ்விதம் மலர்களைக் கொண்டே வழிபாடு நடத்தினர்.

ஆனால் கவுண்டின்யர் முற்றிலும் புது மாதிரியாக வழிபாடு நடத்தினார்.

நாள் தோறும் காட்டிற்குச் சென்று பசுமையான அருகம் புற்களைக் கொண்டு வருவார்.

பின்னர் அந்த அருகம் புற்களை ஆய்ந்து எடுத்து பதினாறாயிரம் அருகுகளால் விநாயகப்பெருமானை அர்ச்சனை செய்வார்.

எத்தனையோ விதமான மண மலர்கள் இருக்க மணம் சிறிதுமற்ற அருகம் புற்களைக் கொண்டு தனது கணவர் விநாயகர் ஆராதனை நடத்துகின்றாரே என்று முனிவரின் தர்மபத்தினி ஆசிரியைக்கு இருந்து வந்தது.

ஒரு நாள் தனக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டைக் குறித்துக் கணவரிடம் கேட்டார். கவுண்டின்யர் தமது தர்மபத்தினியை அன்புடன் நோக்கி " அன்பே ! நீ கேட்ட விஷயம் தொடர்பாக ஒரு வரலாறு உண்டு. அதனைக் கூறினால் நீ விளங்கிக் கொள்வாய், அந்த வரலாற்றை உனக்குக் கூறுகிறேன் " எனச் சொல்லி அது பற்றி விளக்கிக் கூறத் தொடங்கினார்.

யமலோகத்தில் ஒரு நாள் யம தர்மனுடைய சபை கூடியிருந்தது.

சபையில் தேவமாதர்களின் அற்புதமான நடன நிகழ்ச்சி நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. யமதர்மன் நடன நிகழ்ச்சியை ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நடனமாடிய வேகத்தில் திலோத்தமை என்ற நடன மாதின் மேலாடை நழுவி விழுந்து விட்டது.

திலோத்தமையின் பருத்த திரண்ட மார்பகங்களையும் மேனி எழிலையும் ஒரு கணம் மெய்மறந்து நோக்கினான் யமதர்மன்

மேலாடை நழுவி விட்டது கண்டு வெட்கமடைந்த திலோத்தமை சபையிலிருந்து வெளியே சென்று விட்டாள்.

யமதர்மன் விரகதாபத்துக்கு இலக்கானான்.

சபையில் நாட்டியம் நடந்து கொண்டிருக்கும் போதே சபையை விட்டெழுந்து அந்தப்புரம் நோக்கிச் சொல்லத் தொடங்கினான்.

அதிகமான விரகதாபத்தை யமன் கொண்டிருந்ததனால் போகும் வழியிலேயே அவனுடைய தேஜஸ் வெளிப்பட்டது.

தரையில் விழுந்த யமனுடைய தேஜஸிலிருந்து பயங்கரத் தோற்றமுடைய

ஓர் அரக்கன் தோன்றினான்.

பிரம்மாண்டமான உருவமும் பயங்கரத் தோற்றமும் கொண்டிருந்த அனலாசுரன் என்ற அரக்கன் இடி முழக்கம் போல கர்ஜனை செய்ததைக் கேட்டு அந்தப் பிராந்தியத்திலிருந்தவர்கள் எல்லாம் அலறியடித்துக் கொண்டு நாலா புறமும் சிதறியோடினர்.

தன்னிடமிருந்து தோன்றிய அனலாசுரனின் அட்டகாச வெறித் தாண்டவத்தைக் கண்டு அஞ்சி யமதர்மராஜன் தன் மகனையே பார்க்க அஞ்சி அந்தப்புரத்திற்குள் புகுந்து கதவை தாளிட்டுக் கொண்டான்.

உலகத்தில் சகல உயிர்களையும் பறிக்கும் வல்லமையும் அதிகாரமும் படைத்த தன்னுடைய தந்தையாகிய யமதர்மனே தன்னைக் கண்டு ஓடி ஒளிந்தான் என்றால் தனக்கு நிகரானவர்கள் பிரபஞ்சத்தில் யாருமே இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

அதனால் அவன் தேவர்களையெல்லாம் வலுச்சண்டைக்கு இழுத்து அவர்களை மிரட்டி அடித்து பெருந்தொல்லை கொடுக்கத் தொடங்கி விட்டான்.

தேவர்கள் இந்திரன் தலைமையில் வைகுந்தத்திற்கு விரைவில் அனலாசுரன் செய்யும் கொடுமைகளைப் பற்றி திருமாலிடம் முறையிட்டனர்.

திருமால் இந்திரனை நோக்கி, " இந்திரா! அனலாசுரனை மாய்க்கும் வல்லமை விராயகப் பெருமானுக்குத்தான் உண்டு. ஆகவே அவரிடம் சென்று முறையிடுங்கள் " என யோசனை கூறி அனுப்பி வைத்தார்.

இந்திராதி தேவர்கள் விநாயகப் பெருமானைச் சந்தித்து அனலாசுரன் செய்யும் கொடுமைகளை அவரிடம் விவரித்துக் கூறினார்கள்.

"அனலாசுரனை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் கவலைப் படாதீர்கள் " என்று விநாயகப் பெருமான் தேவர்களுக்கு அபயமளித்தார்.

விநாயகப் பெருமானிடம் இந்திராதி தேவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது அந்த இடத்துக்கே அனலாசுரன் வந்து விட்டான்.

ஆஹா, என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். தேவர்களை ஒவ்வொருவர்களாகத் தேடியலையும் என் சிரமம் குறைப்பதற்காக எல்லாரும் ஒரேயிடத்தில் கூடியிருக்கிறீர்கள். ஒரே சமயத்தில் உங்கள் அனைவரையும் துவம்சம் செய்து அள்ளி விழுங்குகின்றேன் " என அனலாசுரன் ஆர்ப்பரித்தான்.

விநாயகப் பெருமான் அனலாசுரனை நோக்கி அலட்சிமாகச் சிரித்து "அனலாசுரா ! இந்த அண்டசராசரம் முழுவதும் சுற்றி வந்து விட்டாய், என்றாலும் நீ போய்ப் பார்க்காத இடம் ஒன்று இருக்கிறது. அதனைப் பார்க்கிறாயா?" என்று கேட்டார்.

"நான் பார்க்காத இடமும் உண்டா? எங்கே இருக்கிறது அந்த இடம்? " என்று அனலாசுரன் கர்ஜனை செய்தான்.

உடனே விநாயகப் பெருமான், தம்முடைய நீண்ட துதிக்கையை நீட்டி அனலாசுரனைத் தூக்கி தமது வாயிலிட்டு விழுங்கி விட்டார்.

அனலாசுரன் வெப்பமயமானவன், அவன் உடல் அக்கினி பேன்று தகித்துக் கொண்டிருக்கும்.

அவன் விநாயகப் பெருமானின் வயிற்றுக்குள் சென்றதும் விநாயகப் பெருமானின் உடலிலிருந்து கடுமையான வெப்பம் கிளம்பி எங்கும் பரவத் தொடங்கியது.

அண்டசராசரங்களும் வெப்பத்தால் தாக்கப்பட்டு அதிலுள்ள ஜீவராசிகள் வெப்பம் தாளாமல் துடித்தன

விஷ்ணு, பிரம்மா, இந்திரன், மற்றும் தேவர்கள் வெப்பத்தைச் சமாளிக்க முடியாது திணறினர்.

விநாயகப் பெருமானின் உடல் வெப்பத்தைத் தணித்தாலல்லாது அண்டசராசரங்களில் பிரதிபலிக்கும் வெப்பத்தைத் தணிக்க முடியாது என உணர்ந்த அவர்கள் விநாயகப் பெருமானின் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

விநாயகப் பெருமான் மீது பன்னீர் குடம் குடமாகக் கொட்டப்பட்டது.

மலைகளைப் போலச் சந்தனத்தை அரைத்துச் சேர்த்து விநாயகப் பெருமானின் உடல் முழுவதிலும் தடவிப் பூசினர்.

வருணதேவன் விடாது பெருமானின் உடல் மீது நீரைத் தெளித்தான்.

தேவர்கள் அமுதத்தைக் கொண்டு வந்து கொட்டினார்.

கோடிக் கணக்கில் தாமரை மலர்களைக் கொண்டு வந்து பெருமானின் திருமேனியில் ஒற்றினர்.

இன்னும் என்னென்ன முயற்சிகளெல்லாமோ செய்து பார்த்துவிட்டனர்.

விநாயகப் பெருமானின் மேனி வெப்பத்தைத் தணிக்க முடியவில்லை.

அப்பொழுது எண்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் ஒன்று சேர்ந்து யோசித்தனர். கடைசி முயற்சியாக ஒரு செயலைச் செய்து பார்த்து விடுவது என்று தீர்மானித்தனர்.

பசுமையான அருகம்புல்லை முனிவர்கள் சேகரித்தனர். ஒவ்வொரு முனிவரும் தலைக்கு இருபத்தொரு அருகுகளாக ஆய்ந்து விநாயகப் பெருமானின் மேனியில் உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை சொரிந்தனர்.

உடனே அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் விநாயகப் பெருமானின் உடல் வெப்பம் அகன்று விட்டது.

விநாயகப் பெருமான் மிக்க மகிழ்ச்சி கொண்டவாராக எண்பத்தெண்ணாயிரம் முனிவர்களையும் நோக்கி, " முனி சிரேஷ்டர்களே! அருகம்புல்லைக் கொண்டு நீங்கள் அர்ச்சனை செய்ததனால்தான் என் உடலில் தோன்றிய வெப்பம் தணிந்து விட்டது. ஆகவே எனக்குச் செய்யப்படும் எந்தப் பூஜையின் போதும் முக்கியமாக அருகம்புல் ஆராதனை இடம் பெற வேண்டும். அருகம்புல் இல்லாமல் எனக்குச் செய்யப்படும் எந்தப் பூசையும் முழுமையான பலனைத் தராது. என்னை மனத்தில் கொண்டு பூஜை செய்யும்போது வேறு எந்தப் பொருளும் இல்லாவிட்டாலும் அருகம்புல் மட்டுமே இடம் பெறுமாயின் அதுவே எனக்கு முழுத் திருப்தியை அளிக்கும். அதிக அளவில் அருகம்புல்லைச் சேகரிக்க முடியா விட்டாலும் இருபத்தொரு புற்களைக் கொண்டு அர்ச்சனை செய்தாலும் நான் திருப்தியடைந்து விடுவேன் " என அனுக்கிரகம் புரிந்தார்.

தேவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தவர்களாக அந்த இடத்திலேயே ஓர் ஆலயம் எழுப்பி அதில் பால் சந்திர விநாயகரைப் பிரதிஷ்டை செய்து விநாயகப் பெருமானை ஆராதித்து அவருடைய அருட்கடாட்சம் பெற்றுத் திரும்பினார்கள்.

இந்தத் தகவலை கவுண்டின்ய முனிவர் தமது தர்மபத்தினிக்குச் சொன்னார்.

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்,
துன்பம் போம், நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

கவசம்

## செந்தில் மேவும் சரவணன்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவரவேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வஶர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரர

ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறக் காக்க

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துகிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பி
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்

எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.




PRINTED BY UNIE ARTS (PVT) LTD, COLOMBO - 13. TEL.: 330195